# பரிந்துரைப்புச் செயல்முறை தொடர்பான பெற்றோர் / பாதுகாவலர்/ பராமரிப்பாளருக்கான வழிகாட்டி

Toronto District School Board

tdsb | விசேட கல்வி மற்றும் உள்ளடக்கல்

## வழிகாட்டல் கொள்கை

கற்றலுக்கான வாய்ப்புகளுக்குச் சமமான அணுகலை, அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கு ரொறன்ரோப் பிராந்தியக் கல்விச் சபை (TDSB) உறுதிபூண்டுள்ளது. மனித உரிமைகள், சமத்துவம், இனவெறி எதிர்ப்பு, ஒடுக்குமுறை எதிர்ப்பு, வலுவிழப்புத் தொடர்பான பாகுபாடின்மை ஆகியவற்றுக்கான எங்களின் உறுதிப்பாட்டை இது உள்ளடக்கியுள்ளது. இந்த உறுதிப்பாடு, TDSB இன் சமத்துவக் கொள்கையின் அடிப்படையுடன் ஒத்திருப்பதுடன், அனைத்துத் தரங்களிலும் உள்ள திட்டங்கள் யாவற்றையும் ஆதரிக்கிறது.

## பங்காளர்களாகப் பெற்றோர்

பெற்றோராக/பாதுகாவலர்களாக/பராமரிப்பாளர்களாக, உங்களின் பிள்ளையை நீங்களே நன்கறிவீர்கள். உங்களின் பிள்ளையின் ஆற்றங்கள், திறன்கள், தேவைகள் மற்றும் அவர் முன்னேற வேண்டிய விடயங்கள் உங்களுக்குத் தெரியும். உங்களின் பிள்ளையைப் பற்றிய தகவல்களை வழங்குவதும், உங்களின் பிள்ளையின் கல்வியைப் பாதிக்கும் தீர்மானங்களில் நீங்கள் பங்கேற்பதும் மிகவும் முக்கியமாகும். TDSB இலுள்ள விசேட கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கான பரிந்துரைப்புச் செயல்முறையை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்வதற்கு இந்த வழிகாட்டி உதவிசெய்யுமென நாங்கள் நம்புகிறோம். இந்தச் செயல்முறை பற்றி மேலதிக தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்களின் பிள்ளையின் ஆசிரியரை அல்லது அதிபரைத் தொடர்புகொள்ளுங்கள்.


## என் பிள்ளை பற்றிய கரிசனைகள்

கற்பதில், உங்களின் பிள்ளைக்குச் சிரமங்கள் இருப்பதை நீங்களோ அல்லது உங்களின் பிள்ளையின் ஆசிரியரோ அடையாளம்காணக்கூடும். அடையாளம்கண்டமை பற்றிக் கலந்துரையாடுவதற்காக உங்களின் பிள்ளையின் ஆசிரியர்/ஆசிரியர்கள் உங்களைத் தொடர்புகொள்ளக்கூடும் அல்லது உங்களின் பிள்ளையைப் பற்றி உங்களுக்கு இருக்கும் கரிசனைகள் பற்றிக் கதைப்பதற்காக ஆசிரியரை/ஆசிரியர்களை மற்றும் அதிபரை நீங்கள் தொடர்புகொள்ளக்கூடும். நண்பர், குடும்ப உறுப்பினர் அல்லது சார்பாகப் பேசக்கூடிய ஒருவரை இதில் தொடர்புபடுத்துவதை நீங்கள் எந்த நேரத்திலும் தெரிவுசெய்யலாம், அத்துடன் பாடசாலைப் பணியாளர்களும் உங்களின் அனுமதியுடன் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

## பரிந்துரைப்புச் செயல்முறை

பரிந்துரைப்புச் செயல்முறையில் பின்வரும் படிமுறைகள் அடங்குகின்றன:

- தனிநபருக்கான கற்றல் திட்டம் ஒன்றின் (ILP) உருவாக்கம்;
- பாடசாலையிலுள்ள பணியாளர்களுடன் பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவினரின் (IST) சந்திப்புகள்;
- பாடசாலையிலுள்ள பணியாளர்களுடன் பாடசாலைக்கு ஆதரவுவழங்கும் குழுவினரின் (SST) சந்திப்புகள்; விசேட கல்வி மற்றும் உள்ளடக்கல் மற்றும்/அல்லது நிபுணத்துவ ஆதரவுச் சேவைப் பணியாளர்கள்;
- அடையாளம்காணல், பொருத்தமான இடம்வழங்கல் மற்றும் பரிந்துரைப்புக் குழு (IPRC).




## தனிநபருக்கான கற்றல் திட்டம் (ILP) ஒன்றுக்கூடாக மாணவர்களுக்கு ஆதரவுவழங்கல்

தனிநபருக்கான கற்றல் திட்டம் (ILP) என்பது, அவர்களுக்கான அடைவுகள் தொடர்பான இலக்குகளை அடையமுடியாமலிருக்கும் மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான முதல் படியாகும். ILPஐ உருவாக்கலில், முடிந்தவரையில் மாணவரினதும் முகமையினதும் கருத்துக்களுக்கும், பெற்றோரின் பங்களிப்புக்குமான வாய்ப்பை வழங்குவதற்காகப் பெற்றோரை/பாதுகாவலர்களை/பராமரிப்பாளர்களை மற்றும் மாணவரை (பொருத்தமாயின்) அது உள்ளடக்கும்.

ILP என்பது மாணவர்களின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்காக, தொடர்ந்து நிகழும் மதிப்பீடுகள், கற்பித்தல் உத்திகள், இடையீடுகள், பரிந்துரைப்புக்கள், பின்தொடரப்படும் உத்திகள் போன்றவற்றை விபரிப்பதற்காகவும், அவை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காகவும், அவற்றைக் கண்காணிப்பதற்காகவும் ஆசிரியர் பயன்படுத்தும் ஒரு கருவியாகும். ஆசிரியரால் வழங்கப்படும் கற்றல் நிலைமைகளின் அடிப்படையில், மாணவரின் அப்போதைய திறன்கள், ஆற்றல்கள் மற்றும் அவரின்

அடையாளம் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் தொடர்பில் முன்னேற வேண்டிய விடயங்கள் பற்றிய விரிவான மற்றும் குறிப்பிட்ட தகவல்களைத் தொகுப்பதற்கு ILP வழிசெய்கிறது. அடுத்தகட்டப் படிமுறைகளைத் தீர்மானிப்பதற்காக 6-8 வாரங்களுக்கு இது செயல்படுத்தப்படுகிறது, அத்துடன் மதிப்பிடப்படுகிறது. மாணவர்களின் முன்னேற்றத்தை ஆசிரியர்/ஆசிரியர்கள் தொடர்ந்து மதிப்பிடுகிறார்/மதிப்பிடுகிறார்கள், தேவைகளுக்கேற்ப ILPஐச் சரிசெய்கிறார்/சரிசெய்கிறார்கள், அத்துடன் முன்னேற்றத்தை மதிப்பிட்டு, பெற்றோர் மற்றும் பொருத்தமான பணியாளர்களுக்கு அறிக்கை செய்கிறார்/செய்கிறார்கள்.

திட்டமிடப்பட்ட இடையீடுகள் வெற்றிகரமாக இருந்தால், பணியாளர்களும் மாணவரும் அந்த இடையீடுகளைத் தொடர்வார்கள். அதன் பின்னரும் மாணவருக்குச் சவால்கள் இருப்பின், கீழே உள்ள படிமுறைகள் பின்பற்றப்படும்.

## பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவினருக்குப் (IST) பரிந்துரைப்பு

கருத்திலெடுக்கப்பட்டட இடையீடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன, ஆனால், தொடர்ந்தும் மாணவருக்குச் சவாலாக இருக்கிறதெனில், பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவினரிடன் (IST) மாணவரை ஆசிரியர்/ஆசிரியர்கள் பரிந்துரைப்பார்/பரிந்துரைப்பார்கள், அவர்கள் ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஆதரவு வழங்குவதற்குத் தேவையான மேலதிக இடையீடுகளை அல்லது உதவிகளை ஆராய்வார்கள்.

IST சந்திப்புக்கள் என்பது திட்டத்துக்கும் மாணவரின் கல்விரீதியான, உடல்ரீதியான, சமூகரீதியான மற்றும் உணர்ச்சிரீதியான ஆற்றல்கள் மற்றும் தேவைகளின் வெற்றியை ஆதரிப்பதற்கும் செயலூக்கமான தீர்வைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும். கிரமமாக முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன் ஆதரவுகளையும் உத்திகளையும் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் மூலம் மாணவர், பெற்றோர் மற்றும் ஆசிரியருக்கு/ஆசிரியர்களுக்கு ஆதரவுகளை வழங்குவதற்காக பாடசாலைக் குழுவினர் இணைந்து செயல்படுகின்றனர்.

## பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவின் அங்கத்தவர்கள்

பின்வருபவர்கள் உள்ளடங்கலானோர் IST இன் அங்கத்தவர்களாக உள்ளனர்:

- மாணவரின் ஆசிரியர்/ஆசிரியர்கள்;
- அதிபர் அல்லது உதவி அதிபர்;
- விசேட கல்விக்கான பாடசாலை ஆசிரியர் (இருந்தால்);
- ஒரு வழிகாட்டல் ஆசிரியர் (guidance teacher) /கவுன்சிலர் (குறிப்பாக இரண்டாம்தரப் பாடசாலைகளில் );
- மாணவர்களின் வெற்றிக்கான ஆசிரியர் (குறிப்பாக இரண்டாம்தரப் பாடசாலைகளில்).

## பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவின் செயற்பாடு

சேகரிக்கப்பட்ட தகவல்களையும், பரிசீலிக்கப்பட்ட மதிப்பாய்வுகளையும் (உ+ம்., அடையாளம்கண்டறிதலுக்கான மதிப்பீடுகள், சமீபத்திய வேலை மாதிரிகள், நேரடியான அவதானிப்புக்கள்) தனிப்பட்ட கற்றல் சுயவிவரத்தில் (ILP) பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட உத்திகளையும் ஆசிரியர்/ஆசிரியர்கள் வைத்திருப்பார்/வைத்திருப்பார்கள், அத்துடன் IST

சந்திப்பின்போது, இந்தத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வார்கள். ILP, தொடர்ந்து பயன்படுத்தப்படும் உத்திகள், மதிப்பீடுகள், ஆற்றல்கள், தேவைகள், இடையீடுகள், பரிந்துரைப்புக்கள், பெறுபேறுகள் தொடர்பான கற்பித்தல் நடைமுறைகள் ஆகியவற்றை IST மதிப்பாய்வு செய்வதுடன், ஆதரவு வழங்குவதற்காக மாணவரைப் பின்தொடரும்.

IST சந்திப்புக்குப் பின்னர், IST பரிந்துரைத்த மேலதிக உத்திகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக மாணவருடன் இணைந்து ஆசிரியர் பணியாற்றுவார். தேவைகளுக்கேற்ப விசேட கல்வி மற்றும் உள்ளடக்கலுக்கான ஆலோசகர் (Special Education & Inclusion Consultant) உள்ளடங்கலாக, மேலதிக பணியாளர்களின் உதவிகளை ஆசிரியர் பெற்றுக்கொள்வார்.

பெரும்பாலான மாணவர்களின் தேவைகளை IST மூலம் நிவர்த்திசெய்ய முடியும். இருப்பினும், IST பரிந்துரைத்த உத்திகள் சிறிதளவிலான வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டிருந்தால், ஆதரவுவழங்கும் பாடசாலைக் குழுவினருக்கு (SST), அந்த மாணவரை IST பரிந்துரைக்கலாம். இந்தச் செயல்முறை கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைக்கு ஆதரவுவழங்கும் குழுவினருக்குப் (SST) பரிந்துரைப்பு

பாடசாலையிலுள்ள ஆதரவுக் குழுவினருடன், ஆசிரியரும் அதிபரும் கலந்தாலோசித்த பின்னர், பயன்படுத்தப்பட்ட உத்திகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியைத் தருகிறதெனத் தீர்மானிக்கப்பட்டால் மட்டுமே, பாடசாலைக்கு ஆதரவுவழங்கும் குழுவினருக்கு (SST) மாணவர் பரிந்துரைக்கப்படலாம்.

## பாடசாலைக்கு ஆதரவுவழங்கும் குழுவின் அங்கத்தவர்கள்

மேலே பட்டியலிடப்பட்டிருக்கும் பாடசாலைப் பணியாளர்களுடன், பின்வருபவர்களை உள்ளடக்குவதன் மூலம் இந்தக் குழுவினர் மேலதிக அறிவை வழங்குகின்றனர்;

- உளவியலாளர்கள்;
- சமூக சேவகர்கள்;
- வருகைதரு கவுன்சிலர்கள்;
- பேச்சு மொழி நோயியல் நிபுணர்கள்;
- செயல்பாடுகள்சார் சிகிச்சையாளர்கள்;
- உடல்ரீதியான சிகிச்சையாளர்கள்; மற்றும்
- பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் மற்றும் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள்.

ஒரு பிள்ளையின் கல்வியில் மிகவும் பெறுமதிமிக்க பங்காளர்களாக பெற்றோர் இருக்கிறார்கள். IST மற்றும் SST சந்திப்புக்களுக்குப் பெற்றோரின் வருகை கட்டாயமானதல்ல என்றாலும்கூட, அவற்றில் கலந்துகொள்ளுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். கலந்துகொள்ளமுடியாத பெற்றோருக்கு, அவர்களின் பிள்ளையின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்காகச் சந்திப்பில் பரிந்துரைக்கப்பட்டிருந்த செயல்பாடுகளுக்கான திட்டம் பற்றித் தெரிவிக்கப்படும். 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களும் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள், அத்துடன் அவர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள மாணவர்கள் SST இல் கலந்துகொள்வதற்கு அழைக்கப்பட வேண்டும், அத்துடன் அவர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றோருடன் பகிர்ந்துகொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

உளவியலாளர் அல்லது சமூக சேவகர் போன்ற TDSBஇன் நிபுணத்துவ ஆதரவுச் சேவைகளில் (PSS) உள்ள அங்கத்தவர் ஒருவர் சந்திப்பில் கலந்துகொள்ளும்போது, மாணவரின் பெயரைப் பயன்படுத்தி அவரைப் பற்றிக் கலந்துரையாட வேண்டுமெனில் அதற்குப் பெற்றோரின் அனுமதி தேவைப்படும்.

PSS ஆதரவை, ISTக்கு மீளச்செல்லலை அல்லது அடையாளம்காணல், பொருத்தமான இடம்வழங்கல் மற்றும் பரிசீலனைக் குழுவுக்குப் (IPRC) பரிந்துரைப்பதை SST பரிந்துரைக்கக்கூடும்.

## அடையாளம்காணல், பொருத்தமான இடம்வழங்கல் மற்றும் பரிந்துரைப்புக் குழு (IPRC)

மேலதிக மதிப்பீடுகள் பூர்த்தியான பின்னர், அடையாளம்காண வேண்டியதன் அவசியத்தை அந்த முடிவுகள் சுட்டிக்காட்டினால், அந்த மாணவர் விதிவிலக்கானவராக அடையாளம்காணப்பட வேண்டுமா என்பதையும், பொருத்தமான இடம்வழங்கலையும் தீர்மானிப்பதற்காக IPRC சந்திப்பொன்று நடத்தப்படுகிறது. IPRCகள் பற்றிய மேலதிகமான தகவல்களுக்கு, பெற்றோர்/பாதுகாவலர்/பராமரிப்பாளர்களுக்கான அடையாளம்காணல், பொருத்தமான இடம்வழங்கல் மற்றும் பரிசீலனைக் குழு வழிகாட்டியைத் தயவுசெய்து பாருங்கள்.

## மேலதிக தகவல்கள்

- கல்வி அமைச்சின் ஒன்ராறியோவில் பாலர்வகுப்பு முதல் 12ம் வகுப்புவரையான விசேட கல்வி (Special Education in Ontario Kindergarten to Grade 12)
- பெற்றோர்/பாதுகாவலர்/பராமரிப்பாளர்களுக்கான ரொறன்ரோ கல்விச் சபையின் அடையாளம்காணல், பொருத்தமான இடம்வழங்கல் மற்றும் பரிந்துரைப்புக் குழு தொடர்பான வழிகாட்டி (TDSB's Guide to the Identification, Placement and Review Committee (IPRC) for Parents/Guardians/Caregivers)
- பெற்றோர்/பாதுகாவலர்/பராமரிப்பாளர்களுக்கான ரொறன்ரோ கல்விச் சபையின் தனிநபருக்கான கல்வித் திட்டம் தொடர்பான வழிகாட்டி (TDSB's Guide to the Individual Education Plan (IEP) for Parents/Guardians/Caregivers)
- ரொறன்ரோ கல்விச் சபையின் விசேட கல்வித் திட்டம் (TDSB's Special Education Plan)